DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 3-2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுபாஷ்சந்திரபோஸ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 19.08.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தமிழக காவல் துறையில் காவல் துணை கண்காணிப்பளாராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 22.07.2023ந் தேதி வேதாரண்யம் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் 14.30 மணிக்கு வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 13/2023 சட்டப்பிரிவு 376(2)(1) இ.த.ச and 3(1)(w)(1) (II) r/w 3(2)(V) SC/ST ACT 2015ன் படி வழக்கு கோப்பினை உத்தரவின்படி எனது விசாரணைக்கு எடுத்துகொண்டேன். மதியம் 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்றும் சாட்சிகள் முத்துசாமி, தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வரைபடம் **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் லலிதா, குஞ்சம்மாள், ராஜலட்சுமி, வனிதா, தியாகராஜன், முத்துசாமி இவர்களை தனிதனியாக விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடி செல்லும்போது கிடைத்த தகவலின்படி 18.30 மணிக்கு வேதாரண்யம் சோமநாதர்கோவில் ஒயின்சாப் அருகில் நின்றுகொண்டிருந்த எதிரி சிங்காரவேல் த/பெ. வடிவேல் என்பவரை காரணம் கூறி கைது செய்தும் அங்கிருந்த சாட்சிகள் ராஜு, சின்னதுரை இவர்கள் முன்னிலையில் மேலும் விசாரிக்க தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து கையொப்பம் பெற்றேன். பின்பு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று அடையாளம் காட்டினார். பின்பு சாட்சி ராஜு, சின்னதுரை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியுடன் நிலையம் வந்து 20.00 மணிக்கு நிலைய பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தேன். பின்பு தக்க வழிகாவல் மூலம் எதிரியை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 22.08.2023 அன்று பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு பரிசோதனை செய்த டாக்டர் எஸ். திவ்யா அவர்களை விசாரித்தும் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.07.2023 அன்று பாதிக்கப்பட்ட பெண் கார்த்திகா த/பெ ரமேஷ் என்பவரை அவரது தாயார் லலிதா மற்றும் பெண்கள் சிறப்பு கல்வி பயிற்றுனர் கீர்த்திகா இவர்கள் முன்னிலையில் விசாரித்து பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் கீர்த்திகா விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாதி சான்றிதழ் வழங்கிய தாசில்தார் ஜெயசீலன் என்பவரை 22.08.2023 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சான்றுகள் பெற்றேன். 21.09.2023 அன்று இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்டு எதிரிக்கு மருத்துவ பரிசோதனை செய்த டாக்டர் ஜுவிதன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சான்று பெற்றேன். 21.09.2023 அன்று சாட்சிகள் குணசேகரன்,

முதல்நிலை காவலர் அருண், இரண்டாம்நிலை காவலர் வனிதா, ஆய்வாளர் பசுபதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.08.2023 அன்று 164(5) கு.வி.மு.ச பிரிவின்படி பாதிக்கப்பட்ட பெண்ணிடம் இரகசிய வாக்குமூலம் கணம் நீதித்துறை நடுவர் எண் 2 நாகப்பட்டினம் அவர்களிடம் பாதிக்கப்பட்ட பெண்ணை ஆஜர்படுத்து நடவடிக்கை எடுத்தேன். என்னிடம் அந்த நகல் ஒன்று நீதித்துறை நடுவரிடம் இருந்து ஒரு நகல் அனுப்பப்பட்டது.என்னிடம் பெறப்பட்ட நகலின் அசல் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.09.2023 அன்று இவ்வழக்கின் விசாரணையை எதிரியின் மீது சட்டப்பிரிவு 376(2)(1) இ.த.ச and 3(1)(w)(1) (II) r/w 3(2)(V) SC/ST ACT 2015ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. 22.07.2023ந் தேதி மாவட்ட கண்காணிப்பாளர் என்னை மேற்படி வழக்கில் விசாரணை அதிகாரியாக நியமித்து பிறப்பித்த ஆணை **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ நடைபெற்ற தேதி 21.07.2023 என்று சொன்னால் சரிதான். 22.07.2023ந் தேதி தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எந்த காரணத்திற்காக காலதாமதம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ஆய்வாளர் 22.07.2023ந் தேதி 13.00 மணிக்கு புகார் பெறப்பட்டது என்றால் சரிதான். 22.07.2023ந் தேதி புகார் 12.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த 12.00 மணி என்பது மதியம் ஆகும் இரவு 12.00 மணி என்று சொன்னால் தவறு. இந்த புகாரை கொடுத்தவர் லலிதா ஆவார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டபோது பாதிக்கப்பட்ட பெண் இருந்தார் புகார் அவரது அம்மா கொடுத்தார் அதன்பின் பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்சொன்ன தேதியில் பாதிக்கப்பட்ட பெண்ணை நான் விசாரித்தேன் ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. 22.07.2023ந் தேதி பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரித்து ஏன் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் மற்ற

சாட்சிகளை விசாரிக்க வேண்டியிருந்ததால் அன்றைய தினம் பதிவு செய்யவில்லை. பாதிக்கப்பட்ட பெண் கார்த்திகா மனநலம் பாதிக்கப்பட்டவரா என்றால் மனவளர்ச்சி இல்லாதவர் ஆவார். அவர் எத்தனை சதவீதம் மனவளர்ச்சி பாதிக்கப்பட்டவர் என ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பார்வையிடவில்லை தாக்கல் செய்யவில்லை. பாதிக்கப்பட்ட நபரை மருத்துவரிடம் அனுப்பி அவரால் சாட்சி சொல்ல முடியுமா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. அவர் 80 சதவீதம் மனவளர்ச்சி குன்றியவர் என்றும் அவரால் சாட்சியம் அளிக்க முடியாது என்றும் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணை பகடைக்காயாக பயன்படுத்தி கொடுக்கப்பட்ட பொய் புகாரை நான் சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபரையும், அவரது அம்மாவையும் விசாரித்த பின் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ சிகிச்சைக்கு சென்றாரா என்றால் 23.07.2023ந் தேதி சென்றார். பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ சிகிச்சைக்கு சென்றாரா அல்லது பரிசோதனைக்கு சென்றாரா என்றால் மருத்துவ பரிசோதனைக்கு சென்றார். 22.07.2023ந் தேதி மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பவில்லை 23.07.2023ந் தேதி தான் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். வன்புணர்வில் பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கு எத்தனை மணிநேரத்திற்குள் அனுப்ப வேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியும் 24 மணி நேரத்திற்குள் அனுப்ப வேண்டும். 22.07.2023ந் தேதி பாதிக்கப்பட்ட பெண் 23.07.2023ந் தேதி மருத்துவமனைக்கு அனுப்ப காரணம் என்னவென்றால் தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. நீங்கள் குறிப்பிட்ட காரணத்திற்குள் அனுப்பினால் அந்த பெண்ணிற்கு எந்த பாதிப்பும் இல்லை என்ற விபரம் தெளிவாக தெரிந்துவிடும் என்பதால் காலதாமதம் படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. லலிதா கொடுத்த புகாரில் ஐயா என்று கூறுவது எங்கள் ஊரை சேர்ந்த வடிவேல் மகன் சிங்காரவேலு தான் என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை மரியாதைக்காக தான் அவ்வாறு அழைத்திருப்பார் அதை பற்றி நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட பெண் கார்த்திகா

குஞ்சாம்மாளிடம் சொல்லிய விரபங்களை அவரது தாயார் லலிதாவிடம் சொல்லி கொடுத்த புகாரின் காரணமாக தான் இந்த வழக்கு உள்ளது என்றால் சரிதான். வேலை செய்கின்ற இடத்தில் நிறைய பேர்கள் இருந்தார்கள் அவர்கள் எத்தனை பேர் என்று கணக்கெடுக்கவில்லை. விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. அங்கு 200 பேர்களுக்கு மேல் வேலை செய்தார்கள் என்றால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. அந்த நபர்களில் சம்பவத்தை நேராக பார்த்ததாக யாரும் சாட்சியம் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் நடைபெற்ற இடம், டீ தயார் செய்த இடம், வேலை செய்ததாக சொல்லப்படும் இடம் இதெல்லாம் சில மீட்டர் சுற்றளவில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சுமார் 2 கி.மீ சுற்றளவு இருக்கும் என்றால் சரிதான். டீ தயார் செய்யும் இடத்திற்கும் குட்டைக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்று சொன்னால் அங்கு மறுபடியும் சென்று பார்த்தால் தான் தெரியும். பாதிக்கப்பட்ட பெண் கார்த்திகா தான் சம்பவ நடைபெற்ற இடத்தை பார்வை மகசரில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் வித்தியாசமாக எந்த பொருளையும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் சம்பவம் நடைபெற்றதற்கு எந்த புகைப்படமும் தாக்கல் செய்யவில்லை. அதற்கு நான் குறிப்புகள் எதுவும் சொல்லவில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து இரத்தகரை படிந்த ஆடை, விந்து படிந்த உடை எதையும் நான் கைப்பற்றவில்லை பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். மொழிபெயர்ப்பாளர் கீர்த்திகாக்கு வழக்கு பற்றிய விபரங்கள் தெரியும் அவரை நான் விசாரித்துள்ளேன். கீர்த்திகா அவர் மொழிபெயர்பாளர் கிடையாது அருகில் இருந்தார். முதன்முதலில் பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரிக்கும்போதும் அவர் தான் அருகில் இருந்தார். நீதித்துறை நடுவர் எண் 2 க்கும் இந்த பெண் கீர்த்திகா தான் உடன் இருந்தார் என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் எண் 2 பதிவு செய்யப்பட்ட 164 வாக்குமூலத்தில் பாதிக்கப்பட்ட பெண் கார்த்திகாக்கு வாய் பேச இயலாது காது கேட்காது என்கின்ற விபரத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளார் அவர் மனவளர்ச்சி குன்றியவர் என்ற விபரம் அறிக்கையில் இல்லை என்று சொன்னால் சரிதான். எதிரி பாதிக்கப்பட்ட பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவ அறிக்கையில்

பாதிக்கப்பட்ட பெண்ணின் பிறப்புறுப்பில் கையை வைத்துள்ளார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவ அறிக்கையில் மருத்துவர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வெளிப்புற காயங்களோ, உட்புற காயங்களோ, இரத்தபோக்கோ இல்லை என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். இந்த விரபங்கள் தெரிந்துகொண்டுதான் அவர் பிறப்புறுப்பில் கையை வைத்தார் என்று புதுகட்சி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 21.09.2023ஆம் ஆண்டில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ஆய்வாளரை விசாரித்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணை செய்யாமலேயே விசாரணை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சியம் சொன்ன தியாகராஜனுக்கும் எதிரிக்கும் இருந்த விரோதத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட பெண் கார்த்திகாவை முன்னிருத்தி பொய் வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் மருத்துவர்களையோ, சாட்சிகளையோ சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட பெண் மனவளர்ச்சி பாதிக்கப்பட்டவர் என்ற விபரம் தெரியாமலேயே புலன் விசாரணை முடிந்ததாக கூறிய இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. கார்த்திகாவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இது முழுக்க முழுக்க ஜோடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும் அவர் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை 18.30 மணிக்கு கைது செய்யவில்லை என்றும் அவரை 22.07.2023ந் தேதியிலேயே ரிமேண்ட் செய்துவிட்டேன் என்றால் சரிதான்.

பார்வை மகசர், மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் அதனால் தான் டீ தயார் செய்யும் இடத்திற்கும் ஓடைக்கும் உள்ள துூரத்தை என்னால் சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி நிரபராதி என்றும் இது தங்கள் ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல.